JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 6 Witness
for Prosecution

| CC. No. | 127/2024 | Crime No. | 253/2024 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| Name | **PW-6- சத்திகா** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 13th day of February 2026. | | |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு அளிக்கப்பட்டு, நீதமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு அரசு மருத்துவமனையில் முதல் நிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.09.2024 ம் தேதியன்று நான் அந்தியூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது அன்றைய தினம், அதிகாலை 12.45 மணிக்கு, கிருஷ்ணன் வயது 35, த/பெ. பெருமாள், 19 மெயின் வீதி, தோட்டக்குடியாம்பாளையம், சிந்தகவுண்டன்பாளையம், என்பவர் சிகிச்சைக்காக ஆஜரானார். அவரை விசாரித்தபோது அடையாளம் தெரிந்த நான்கு நபர்கள் அவர்கள் வீட்டின் முன்பு 15.09.2024 ம் தேதியன்று, பிற்பகல் 11.15 மணிக்கு தன்னை தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது

1) இடது மணிக்கட்டு அருகில் வலி மற்றும் வீக்கம் இருப்பதாக கூறினார்,

நான் அவரை பரிசோதித்தபோது அவரிடமிருந்து மது வாடை வந்தது. அவர் சுய நினைவுடன் இருந்தார். அவரை பரிசோதித்தபோது இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு மற்றும் ஆக்ஸிஜன் அளவு சரியாக இருந்த.

அவருக்கு இடது மணிக்கட்டின் மேல் வீக்கம் மற்றும் தொட்டால் வலி இருந்தது. அவருக்கு TT மற்றும் வலிக்கான ஊசி ஆகியவை போட்டு சிகிச்சையளித்து, மேல் சிகிச்சைக்காக பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை அளித்தேன். பின்னர் 18.10.2024 ம் தேதியன்று, பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரில் அளித்த சிகிச்சை ஆவணங்களின்படி அவருக்கு இடது

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.13 06:31:50 +0530

மணிக்கட்டின் மேல் எலும்பு முறிவு ஏற்பட்டதை உறுதி செய்து, அவருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவானது கொடுங்காயம் என்று சான்று அளித்தேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நடந்தவற்றை கூறினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலீசார் விசாரிக்கும்போது ஆயுதங்கள் எதுவும் காட்டி விசாரிக்கவில்லை என்றால், சரிதான். பெருந்துறையில் சிகிச்சையின்போது இந்த வழக்கில் அடிப்பட்ட நபர் தன்னை மூன்று பேர்கள் தாக்கியதாகத்தான் விசாரணையில் சொன்னார் என்றால், சரிதான். இந்த வழக்கில் அடிப்பட்ட நபர் தன்னை எந்த ஆயுதத்தால் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். மேற்கண்ட காயங்கள் ஒரு நபர் மதுபோதையில் கீழே விழும்போது மணிக்கட்டில் அடிப்பட வாய்ப்புள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கில் அடிப்பட்ட நபருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.13 06:32:08 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 7 Witness
for Prosecution

| CC. No. | 127/2024 | Crime No. | 253/2024 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| Name | **PW-7- மூர்த்தி** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 13th day of February 2026. | | |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு அளிக்கப்பட்டு, நீதமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தோட்டக்குடியாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி மற்றும் மாதம் நினைவில்லை, கடந்த 2024 ம் வருடம், தோட்டக்குடியாம்பாளையத்தில் நடந்த அடிதடி சம்பவம் தொடர்பாக போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அப்போது என்னை சாட்சியாக கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் அங்கிருந்து எந்தப் பொருளையும் கைப்பற்றவில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரிக்க, நான் நடந்ததை கூறினேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

எங்கள் தெருவிலுள்ளவர்கள் காலை கடன் கழிக்க ஏரிக்கரைக்கு செல்ல தனசேகர் என்பவரின் வீட்டு வழியாகத்தான் செல்ல வேண்டும் என்றும் கடந்த 15.09.2024 ம் தேதியன்று கிருஷ்ணன் என்பவர் வேலை முடித்து வீட்டிற்கு வந்து விட்டு கழிவறைக்கு செல்ல ஏரிக்கரைக்கு சென்றபோது தனசேகர் மற்றும் குப்புசாமி ஆகிய இருவரும் கிருஷ்ணனை வழிமறித்து குறுக்ககாட்டி கிருஷ்ணனிடம் வாய்த்தகராறு செய்தனர் என்றும் பின்னர் சிறிது நேரத்தில் இரவு 11.15 மணிக்கு கிருஷ்ணன் தன் வீட்டிற்று வெளியே மின் கம்பத்தில் அருகில் நின்று

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.13 06:32:15 +0530

கொண்டிருந்தபோது அங்கு வந்த தனசேகர் கிருஷ்ணனை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும் சத்தம் கேட்டு நானும், தனலட்சுமி சொக்கன் மற்றும் அக்கம் பக்கம் உள்ளவர்கள் அங்கு சென்று பார்த்தபோது கிருஷ்ணனை தனசேகர் மாறி மாறி கன்னத்தில் அறைந்தார் என்றும் குப்புசாமி கிருஷ்ணனை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டி, அவரை நெஞ்சில் உதைத்தார் என்றும் அதில் கிருஷ்ணன் நிலைதடுமாறி வீட்டின் அருகில் இருந்த சாக்கடையில் விழுந்தார் என்றும் அதனால் அவரது இடது கை மணிக்கட்டு அருகே பலத்த மொக்கைக்காயம் ஏற்பட்டது என்றும் குப்புசாமி அருகில் கிடந்த மரக்கட்டையை எடுத்து கிருஷ்ணனை பார்த்து கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும், அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் பின்னர் கடந்த 18.09.2024 ம் தேதியன்று காலை 08.30 மணிக்கு போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து மரத்தடி ஒன்றை கைப்பறினார்கள் என்றும் அதற்கு சாட்சியாக நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.13 06:32:21 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.